RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt1941

# தமிழக, ஐரோப்பிய வணிகக் குழுமங்கள்

**மு.கயல்விழி** [அ,*]

[அ] தமிழ் மொழி துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம் 631501, இந்தியா.

# Tamil and European Business Companies

**M. Kayalvizhi** [a,*]

[a] Department of Tamil, Pachaiyappas Women College, Kanchipuram, Tamil Nadu 631501, India,

***Corresponding Author**
kayalarul22@gmail.com

Received : 13-08-2019
Accepted : 05-10-2019

**ABSTRACT**

**"Thirai kadal oodium thiraviyam thedu"**

are the words by the Avvaiyar and our ancestors were the people who lived in the way. Tamils have always admired the plow and the business. All three hairdressers gave their business a boost. Sustainable business is seen as the backbone of the economy. The lows of a country can be determined by the economy of the country. From time to time, the rulers protected the business. Merchants who do business are like the eyes of a country. Although society provides the merchants with convenience, specialty, superiority, prominence and importance, they also have many difficulties. Traders were greatly affected by natural disasters, alien invasions, unrelenting wars, and negative regime changes. Merchants were plagued by domestic thieves and wayward robbers. Unrelenting nuisance of pirates

**Keywords:** Business groups, Business development, Economic resource, Social and religious services



**திருமதி மு.கயல்வழி எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,** செட் பயின்றுள்ளார் 10 ஆண்டுகளுக்கும் மேலாய் பல்வேறு நிலைகளில் கல்விப்பணி ஆற்றியுள்ளார். 5 ஆய்வுக் கட்டுரைகளை பன்னாட்டு ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளார். தொடர்ந்து பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவருகின்றார். தமிழரின் பழமை மற்றும் பெருமைகளை வெளிப்படுத்துவதே இவரின் ஆய்வின் முதன்மை நோக்கமாகும். தற்பொழுது புகழ்பெற்ற காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரியின் தமிழ்த் துறையில் உதவிப் பேராசிரியராக பணிபுரிந்து வருகின்றார்.

## வணிகக் குழுமங்களின் தோற்றம்:-

தமிழகத்தின் சங்ககாலம் தொட்டு வணிகம் சிறப்புற்றிருந்த போதிலும் வணிகக் குழுமங்கள் இருந்ததற்கான சான்றுகள் ஏதும் கிடைத்தில. வணிகத்துக்கு ஆக்கமும், ஊக்கமும் நல்கிய பல்லவர் காலத்திலும் இக்குழுக்கள் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. அதற்குப் பின் வந்த சோழர் காலத்தில்தான் முதன் முதலாக வணிகக் குழுமங்கள் பற்றிய சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றன. அதே காலகட்டத்தில் இக்குழுக்கள் பாண்டியர் ஆட்சியிலும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தன. சோழர் காலத்தில் திடீரென்று இக் குழுக்கள் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. மாறாக சங்க காலம் முதல் உருப்பெற்று வந்த வணிகர் ஒற்றுமை என்ற எண்ணம் சோழர் காலத்தில் முழுவடிவம் பெற்று மலர்ந்தது. வணிக வளர்ச்சியின் மேம்பட்ட காலமான சோழர் காலத்தில் இக்குழுக்களின் வளர்ச்சி உச்சநிலையை அடைந்து சமுதாயத்தின் பிரிக்க முடியாத அங்கமாகத் திகழ்ந்தன. தமிழகம் முழுவதும் வணிகக் குழுமங்களின் செயல்பாடுகள் 9ஆம் நூற்றாண்டு முதல் சிறப்பிடம் பெறத் தொடங்கி 15ஆம் நூற்றாண்டு வரை இவற்றின் செயல்பாடுகள் நன்கு செழித்தன. 13ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு ஏற்பட்ட அன்னியர் படையெடுப்புகளாலும், அயலவர் ஆட்சிகளாலும், பொருளாதாரச் சீரழிவுகளாலும் இவ்வணிகக் குழுமங்கள் படிப்படியாக தேய்ந்து இறுதியில் முற்றிலுமாக சுவடு தெரியாமல் மறைந்துபோயின. இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் தமிழகம் போன்றே வணிக குழுமங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இவை கி.பி 9ஆம் நூற்றாண்டில் அங்கு தோன்றி வளர்ந்தன. இவை வணிகர் குழுமங்கள் என்றும் கைவினைஞர் குழுமங்கள் என்றும் அழைக்கப் பட்டன. இவை ஐரோப்பா முழுவதும் பரவி நன்கு செயல்பட்டன. இடைக்கால ஐரோப்பாவை இவ்வணிகக் குழுக்களே கட்டுப்படுத்தின. இவ்வணிகக் குழுக்களின் தோற்றத்தால் வணிகம் செழித்தது, பொருளாதாரம் உயர்ந்தது, மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டது.

தமிழக வணிகக் குழுமங்களின் செயல்பாடுகள்:-

தமிழகத்தில் பல வகையான வணிக குழுமங்கள் செயல்பட்டன. அவை கீழ் வருமாறு:-

1.மணிக் கிராமத்தார்
2.அய்ய பொழில்
3.வளஞ்சியர்
4.அஞ்சு வண்ணத்தார்
5.நானாதேசத்து திசை ஐயாயிரத்தைந்நூற்றுவர்
6.பதிணென் விஷயத்தார்
7. நகரத்தார்:-

இவ்வணிகக் குழுமங்கள் தமக்குள் இணைந்து செயல்பட்டன. இந்த பல தரப்பட்ட வணிகக் குழுமங்களில் பல இனத்தவரும், பல சமயத்தவரும் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் நில மார்க்கமாகவும்,நீர் மார்க்கமாகவும் பலவிடங்களுக்குச் சென்று வணிகம் செய்தனர். இந்தியா முழுவதும் அவர்கள் வணிகம் பரவியிருந்தது. இவர்கள் 18 விஷயங்களுடனும் (மாவட்டங்கள்),32வேளார்புரங்களுடனும்,64 கடிகைதாவனங்களுடனும் (வணிகர் சபை)வணிகம்

புரிந்தனர். இந்த வணிக குழுக்கள் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, மலைநாடு, மகதநாடு, சௌராஷ்டிரம், காம்போஜம் போன்ற பகுதிகளுடன் வாணிகம் மேற்கொண்டனர். மேலும் இவர்கள் இலங்கை, இந்தோனேஷியா, பர்மா, அரேபியா போன்ற அயல் நாடுகளுடன் வணிகம் மேற்கொண்டனர்.

இவர்கள் தாம் செய்த வணிகத்தின் காரணமாய் பெருஞ் செல்வந்தர்களாய்த் திகழ்ந்தனர். இத்துடன் மிகுந்த தெய்வ பக்தியுடையவர்களாகவும் திகழ்ந்தனர். இவர்கள் வாசுதேவன், கண்டழி, மூலபத்திரர், பகவதி போன்ற தெய்வங்களை வழிபட்டனர். நகரத்தார் என்ற செட்டி இனத்தவருடன் இணைந்து பல ஆலயங்களுக்குத் திருப்பணிகள் செய்தனர். பல ஆலயங்களுக்கு கொடைகளும் வழங்கினர். இவர்கள் யானைகள், குதிரைகள், நவரத்தினங்கள், வாசனைப் பொருட்கள், மருந்துகள் போன்றவை இவர்களின் வணிகப் பொருட்களாகும். அக்காலத்தில்

1. உள்நாட்டு வணிகர் - சுதேசிகள்
2. வெளிநாட்டு வணிகர் - பரதேசிகள்
3. பலநாட்டு வணிகர் - நானா தேசிகர்

என்றழைக்கப்பட்டனர். இவர்கள் வணிகப் பொருட்களை கழுதைகள் மற்றும் எருமைகள் கொண்டு நடத்தினர். இவ்வணிகர்களுக்கு வழியில் ஏற்படும் இடையூறுகளைக் களைய அரசர்கள் பாதுகாப்பு வீரர்களை நியமித்தனர். ஆனால் இப்பாதுகாப்பு போதுமானதாக இல்லை. எனவே வணிகக் குழுமங்கள் தம் சொந்த செலவில் பாதுகாப்புப் படைப்பிரிவினரை ஏற்படுத்திக் கொண்டனர். இப்படைகள் அவர்களுக்கு வழிநெடுக பொருட்களுக்கும், வணிகர்களுக்கும் பாதுகாப்பை நல்கின. சரக்குகளை சேமித்து வைத்திருக்கும் கிடங்குகளுக்கும் இப்படைப்பிரிவினரே பாதுகாப்பை நல்கினர். அக்காலப் பாதுகாப்புப் படைகள் வருமாறு:-

1.முனை வீரக்கொடியார்
2.பதினெண்பூமி வீரர்கள்
3.வீரக்கொடி தந்திரம்
4.மும்முறி தண்டம்
5.சேனா முகம்

இப்படைப் பிரிவினரின் செயல்பாட்டால் திருடர் மற்றும் கொள்ளையர் ஆபத்து பெருமளவு குறைந்தது.

## தமிழகத்தின் வணிகக் குழுமங்கள்:-

## 1.மணிக் கிராமத்தார்:-

மணிக் கிராமத்தார் என்ற இவ்வணிகக் குழு மிகவும் பழமையானது. கி.மு முதல் நூற்றாண்டு முதல் இவர்கள் இருந்தனர் என்று சில ஆய்வாளர்கள் கருதுவர். ஆனால் அதற்கான ஆதாரங்கள் ஏதும் இதுவரை கிடைத்தில. எனவே இவர்கள் குறித்து கிடைத்த சான்றுகளைக் கொண்டு ஆராய்கையில் இவர்கள் காலம் கி.பி.9 முதல் கி.பி.14 ஆம்

நூற்றாண்டு வரை செயல்பட்டனர் என்று தெரிகின்றது. தலைநகர் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் இவர்கள் வணிகம் செய்தனர். இவர்கள் உள்நாட்டு வணிகத்துக்கு முக்கியத்துவம் நல்கியவர்கள். கி.பி 9ஆம் நூற்றாண்டு அளவில் இவர்கள் வணிகத்தில் பெருஞ்சிறப்புடன் திகழ்ந்தனர். உறையூர் மணிக்கிராமம்,[1] காவிரிபூம்பட்டினத்து மணிக்கிராமம், கொடும்பாளூர் மணிக்கிராமம்,[2] இளங்கோப்பட்டினத்து மணிக்கிராமம்[3] போன்றவை இவர்களின் வணிக நிலையங்களாகும். கேரளாவில் உள்ள பழைய நாட்டுபுற பாடல்களிகளில் இவர்கள் குறித்துச் சான்றுகள் உள. இவை “மணிக் கிராமம்” என்ற சொல்லுக்கு “வணிகக் குழு” என்று பொருள் தருகின்றன. இக்குழுவில் எல்லா சமயத்தவரும் இடம் பெற்றிருந்தனர். ஆனால் கேரளாவில் உள்ள கிறிஸ்தவ வணிகர்களே இதில் இடம் பெற்றிருந்தனர் என்று சில ஆய்வாளர் கருதுவர். இப்பெயரில் உள்ள “மணி” என்ற சொல்லைக் கொண்டு இவர்கள் கேரள கிறிஸ்தவ வணிகர்களே என்ற முடிவுக்கு வந்தனர். கேரளாவில் உள்ள கொல்லத்தில் கிடைத்த கல்வெட்டில் கையாளப்படும் “மணி”(Manni) என்ற சொல்லைக் கொண்டு கேரளாவில் பரம்பரையாக வணிகம் செய்யும் கிறிஸ்தவ வணிகர்களை(யூதர்கள்) இது குறிப்பிடும் என்று எண்ணி சிலர் குழம்பினர். கேரள மணி வணிகர்கள் கிறிஸ்தவர்கள் என்பதுடன் ஐரோப்பியர்களாவர், மணிக்கிராமத்தார் தமிழர்கள். எனவே இவர்கள் வேறு அவர்கள் வேறு.

சேரமன்னன் ஸ்தாணு ரவியின் கோட்டையம் செப்பேடுகள் “அஞ்சு வண்ணமும் மணிக் கிராமமும் ரட்சிகக் கடவர்” என்று உறைக்கிறது. தவிர வீரராகவச் சக்கரவத்தியின் கோட்டையம் செப்பேடுகள் “பெருங்கோயிலகத் திருந்தருள மாகோதையார் பட்டினத்து இரவிக்கொற்றனாய சேரமான் லோகப்பெருஞ்செட்டிக்கு மணிக்கிராமப் பட்டம் கொடுத்தோம்.” என்றும் உரைக்கிறது. எனவே கல்வெட்டுகள் மூலம் இவர்கள் செட்டி இனத்தவர்கள் என்பது உறுதியாகின்றது. இதுதவிர குற்றாலத்தில் உள்ள கல்வெட்டில் “மணிக்கிராமத்து தர்மசெட்டி ஆயின சடைநன் கவையன்[4] என்றும், திருவண்ணாமலைக் கல்வேட்டுகளில் மணிக்கிராமத்தாரை “சத்தியவாசகர் ஆன தன்ம வாணிகர்” என்றும் கூறுகின்றன[5]. எனவே தொல்லியல் ஆதாரங்கள் முலம் இவர்கள் செட்டி இனத்தவர் என்பதுடன் தமிழர்கள் என்பது உறுதியாகின்றது. இம்மணிக்கிராமத்தார் “சேனா முகம்” என்ற படைப்பிரிவைக் கொண்டிருந்தனர். இவர்களின் வணிக மையங்களாக கொடும்பாளுர், உறையூர் போன்றவை திகழ்ந்தன. இருந்தபோதிலும் தமிழகம் முழுவதும் இவர்கள் வணிகம் பரவிக் காணப்பட்டது. சயாம் நாட்டில் உள்ள கல்வெட்டொன்றில் இவர்கள் சிறப்பு புலனாகும்.[6]

## 2.அய்யப்பொழில்:-

கி.பி. 9ஆம் நூற்றாண்டு முதல் இதன் செயல்பாடுகள் வளர்ந்தன. இவர்களின் வணிகம் தென்னிந்தியா முழுமைக்கும் பரவிக் காணப்பட்டது. மேலை சாளுக்கிய நாட்டில் உள்ள “ஐஹோலே(Aihole) என்ற இடமே இவர்களின் தலைமையிடமாகத் திகழ்ந்தது. எனவேதான் இவர்கள் “அய்ய பொழில்” என்று அழைக்கப்பட்டனர். தமிழகத்தில் இவர்கள் “அய்ய புழன்” என்று பெயரிட்டு அழைக்கப்பட்டனர். இவர்களை “அய்யவோலிபுர பரமேஸ்வரி மக்கள்”

என்று சிறப்பு பெயரிட்டழைத்தனர். நெல், கடுகு, மிளகு, வெற்றிலை, பாக்கு, இஞ்சி, மஞ்சள், பெருங்காயம், குதிரை போன்றவை இவர்களின் முக்கிய வணிகப் பொருட்களாகும். பாண்டிய நாட்டில் இவர்கள் வணிகம் செழித்துக் காணப்பட்டது[7]. வணிகத்தின் மூலம் இவர்கள் மிகவும் புகழ் பெற்றுத் திகழ்ந்தனர். "மும்முரி தண்டம்" என்ற படைப்பிரிவினை இவர்கள் கொண்டிருந்தனர்.

## 3.வளஞ்சியர்:-

இவர்கள் தென்னிலங்கை வளஞ்சியர் என்றழைக்கப்பட்டனர்.[8] இவர்கள் தமிழகம் முழுவதும் பரவி வணிகம் செய்தனர். இவர்கள் உள்நாட்டு வணிகத்துக்கு முக்கியத்துவம் நல்கினர். தானியப் பொருட்களே இவர்களின் முக்கிய வணிகப்பொருட்கள். சிற்றூர் மற்றும் பேரூர்களில் இவர்கள் வணிகம் தழைத்தது. இவர்கள் புத்த சமயத்தைச் சார்ந்தவர்கள். ஆனால் தமிழ்நாட்டில் சைவத்தையும், வைணவத்தையும் ஆதரித்தனர். சான்றாக அருப்புக்கோட்டை சுந்தரேஸ்வரர் கோயிலில் வளஞ்சியன் "சேகன் சேவகத்தேவன்" என்பவன் திருப்பணி செய்ததைக் கொள்ளலாம்.[9] திருப்புரம்பியம் என்ற ஊரில் இவர்கள் அளித்த தானம் பற்றிய கல்வெட்டுகள் உள.[10] தஞ்சை மாவட்டத்தில் உள்ள வேள்விக்குடி கோவிலில் திருப்பணியை வளஞ்சியர்களே செய்தனர்.[11] திருக்கண்ணபுரத்து கோயில் கல்வெட்டு மூலம் இங்குள்ள கருநாகர வீரமடத்தில் வைணவர்களுக்கு உணவளிக்க வளஞ்சியர்கள் தானம் வழங்கியுள்ளனர்.[12] இதன் மூலம் இவர்கள் சைவத்துக்கும் வைணவத்துக்கும் பல சேவைகளை புரிந்துள்ளனர் என்பது புலனாகின்றது. சிலசமயம் பிராமணர்களும் இக் குழுவில் இடம் பெற்று வணிகம் செய்தனர். சான்றாக விழப்புரம் மாவட்டம் எண்ணாயிரம் என்ற ஊரில் இக்குழுவில் பிராமணர் வணிகம் புரிந்ததை அறியமுடிகின்றது.[13] இவர்கள் திருவனந்தபுரம், திருநெல்வேலி, காஞ்சீபுரம், கவேரிபுரம்(கோவை) போன்ற பகுதிகளில் சிறப்புடன் வணிக மையங்கள் கொண்டு செயல்பட்டனர். பல சமயங்களில் திசையாயிரத்து ஐந்நூற்றுவரோடு இணைந்தும் செயல்பட்டனர்.[14]

## 4.அஞ்சு வண்ணத்தார்:-

இவர்கள் பற்றிய செய்திகள் சேரன் ஸ்தாணு ரவி ஆட்சியிலும், சேரன் பாஸ்கர இரவிவர்மன் ஆட்சியிலும் கிடைக்கின்றன. இவர்கள் சேரநாட்டு யூதர்களாக இருக்கவேண்டும் என்று மொழியியலாளர் டாக்டர் குண்டார்ட்(Dr Hermann Gundert) கருதுகின்றார். ஆனால் இவர்கள் சுயேச்சையான வணிகக் குழுவினர் என்று கல்வெட்டறிஞர் வெங்கையா கூறுகின்றார். ஆனால் இவர்களைப் பற்றி கூரந்து ஆயுகையில் இவர்கள் முகமதிய வணிகர் என்பது தெரியவருகின்றது. இவர்களைப் பற்றிய செய்திகள் பல்சந்த மலை மற்றும் களவியற் காரிகை என்ற நூல்களில் கிடைக்கின்றன. இவர்கள் முகமதிய மதத்தை சார்ந்தவர்கள் என்று கீழ்கண்ட பாடலால் அறியலாம்:-

"இயவனராசன் கலுபதிதாமுத லெண்ண வந்தோர்
அயன்மிகுதானையர் அஞ்சுவண்ணத்தவர்"

என்றும்

“ஏழ் பேருந்தேரங்கத் தியனவர்கள் அல்லா எனவந்து”.

இவர்கள் சோனகர்(முகமதிய வணிகர்) என்றும், கலிப்பா வழியில் வந்தவர்கள் என்றும் கீழ்கண்ட பாடலால் அறியலாம்:-

“கலைமதி வாய்மைக் கலுழ்பா வழி வருங்கற்பமைந்த

தலைமையார் ஏழ்பேருந்தேரங்கமும் பெற்றவர்”

சேரமன்னன் ஸ்தாணு ரவி தன் கொல்லத்தில் கட்டிய கிறிஸ்தவ ஆலயத்துக்கு வழங்கிய கொடையின் பொறுப்பை அஞ்சு வண்ணத்தாரிடம் வழங்கியது இக்கருத்தை உறுதிப்படுத்துகின்றது. இவர்களின் வணிக நடவடிக்கைகள் கி.பி.9ஆம் நூற்றாண்டு முதல் தொடங்குகின்றது. இக்குழுவில் பல நிறத்தையுடைவர்கள் இடம் பெற்றமையால் இப்பெயர் பெற்றார்கள். சேரநாட்டின் வாசனை பொருட்களும், பாண்டிய நாட்டு முத்துக்கள் மற்றும் குதிரைகளையும் இவர்கள் ஆர்வத்துடன் வணிகம் செய்தனர். பாண்டிய நாட்டின் தீத்தாண்ட தானபுரத்திலும், சோழநாட்டில் நாகப்பட்டினத்திலும் இவர்களின் வணிக மையங்கள் செயல்பட்டன.

## 5.நானா தேசிகர்:-

இவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வணிகம் செய்யும் குழுவினராவர். நாலு திசைகளிலும் சென்று வாணிகம் செய்ததினால் இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர். இவர்கள் 1000 திசைகளிலும் சென்று வணிகம் செய்யும் கூட்டத்தவர்கள் என்று சிறப்பிக்கப்பட்டனர். அயல்நாட்டு வாணிகத்திலும், கடல் கடந்து வாணிகம் செய்வதில் திறமை கொண்டவர்களாகவும் திகழ்ந்தனர். இவர்கள் பெரும் செல்வ வளமிக்க வணிகர்களாகத் திகழ்ந்தனர். சோழர் ஆட்சிக்காலத்தில் இவர்களின் வெளிநாட்டு வணிகம் சிறப்புற்றிருந்தது. இவர்கள் ஈட்டிய பெரும் செல்வத்தை ஆன்மீக வழியில் செலவிட்டனர். இதற்குச் சான்றாக திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் கோயிலுக்கு இவர்கள் வழங்கிய தானத்தைக் கொள்ளலாம்.[15] இவர்கள் சேர, சோழ, பாண்டிய, மலைநாடு, நேபாளம் போன்ற நாடுகளுடன் வணிகம் நிகழ்த்தினர். இவர்கள் பகவதி என்ற பெண் தெய்வத்தை வழிபட்டனர். சுமித்ரா தீவிலும், பர்மாவிலும் ஆலயங்களை இவர்கள் கட்டியுள்ளனர். தாம் தொழில் செய்த மையங்களை “எரிவீரபட்டிணம்”என்றழைத்தனர். முதலாம் இராஜேந்திரசோழன் காலத்தில் பொன்னேரி வட்டத்தில் உள்ள காட்டூரை “அய்யா புழல் நானா தேசிகர் எரிவீரபட்டினம்” என்று பெயர் மாற்றம் செய்தனர்.[16] சித்தூர் மாவட்டத்தில் உள்ள மதனபள்ளி வட்டம் பசினிகொண்டா என்ற ஊர் “நானாதேசிகர் சம்புர் எரிவீரப்பட்டினம்” என்று மாற்றப்பட்டது[17]. அதேப் போன்று சித்தூர் மாவட்டம் புங்கனூர் வட்டத்தில் உள்ள கர்ஷண பல்லி என்ற ஊரும் எரி வீரப்பட்டனமாக மாற்றப்பட்டது.[18] எரி வீரப்பட்டனங்கள் இவர்கள் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில்(கி.பி.1088) சுமத்ராவில் லோபோ தோவா(Loboe Toewa) உள்ள கல்வெட்டு இவர்களை சிறப்பிக்கின்றது[19].

## 6.பதிணெண் விஷயத்தார்:-

இவர்கள் வெளிநாட்டு வாணிகத்தை மேற்கொண்டவர்கள். கடற்கரைத் துறைமுகங்களான மாமல்லபுரம், சதுரங்கப்பட்டினம் போன்றவற்றில் இவர்கள் வணிக நடவடிக்கைகள் காணப்பட்டன. இடைக்காலத்தில் மிகச்சிறந்த துறைமுகமாயத் திகழ்ந்த சதுரங்க பட்டினத்தின் வணிகம் இவர்கள் கட்டுப்பாட்டில் இருந்தது. இது பாலாற்றின் கழிமுகப்பகுதியில் உள்ளதால் சரக்குகள் பாலாறு நதி மூலமாகக் கொண்டு வரப்பட்டு, இங்கு இருப்பு வைக்கப்பட்டு பின்பு ஏற்றுமதி செய்யப்பட்டன.[20] இவர்கள் இங்கிருந்து பட்டு மற்றும் துணி வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து புகழ்பெற்றனர்.

## 7.நகரத்தார்:-

இவர்கள் தமிழ்நாடு முழுவதும் பரவிய வணிகக் குழுவினராவர். உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் சிறப்புற்றனர். இவர்கள் நகரங்களில் வணிகம் நடத்திய குடும்பத்தினராவர். இதில் பெரும்பாலும் செட்டி இனத்தவரே இடம் பெற்றனர். அனைத்து விதமான வாணிகத்தையும் வெற்றிகரமாக செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்கள். காஞ்சிபுரம், மாமல்லபுரம், பழையாரை, மயிலாப்பூர் போன்ற இடங்களில் இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.[21] சில சமயம் நகர நிர்வாகத்தையும் நிர்வகித்தனர். நகரத்தை நிர்வகித்ததால் நகரத்தார் என்றழைக்கப்பட்டனர்.

## தமிழக வணிகக் குழுமங்களின் பணிகள்:-

வணிகர்கள் தாம் செய்த வணிகத்தின் காரணமாய் பெருஞ் செல்வத்தை ஈட்டினர். இவர்கள் ஈட்டிய பெரும் செல்வத்தினால் சமூகத்தில் பெரும் செல்வாக்குடன் திகழ்ந்தனர். வணிகக் குழுமங்களால் வணிகர்கள் பெரும் பயனடைந்தனர். வணிக குழுமங்களின் தலைவர்களுக்கு பல சிறப்பு சலுகைகளும், அதிகாரங்களும் அரசர்களால் வழங்கப்பட்டன. அவர்கள் ஊர்வலமாகப் பல்லக்கில் செல்லவும, விசேட உடைகள் அணியவும், ஊர்வலத்தின் முன் கொம்பூதிச் செல்வதற்கும், அடிமைகள் வைத்திருப்பதற்கும், வாத்தியங்கள் முழங்கிச் செல்லவும் உரிமைகள் வழங்கப்பட்டன. மேலும் வணிக முற்றுரிமையும் இவர்களுக்கு வழங்கப்பட்டது. வணிக குழுமங்கள் தாம் ஈட்டிய பெருஞ் செல்வத்தை சமயத் திருப்பணிகளில் செலவிட்டன. இவை பல புதிய கோயில்கள் கட்டிதையும், பழைய கோயில்களை புதுப்பித்ததையும், பல கோயில்களுக்கு தானம் வழங்கியதையும் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன. இந்தியா மட்டுமன்றி தாம் வணிகம் மேற்கொண்ட அயல் நாடுகளிலும் கோயில்களைக் கட்டித் தம் இறைநம்பிக்கையை பறைசாற்றினர். தமிழகத்தில் திருவெள்ளாறை,[22] சேலம்,[23] மற்றும் குற்றாலம்,[24] ஆகிய கோயில்களுக்கு தானங்கள் வாரி வழங்கியுள்ளனர். மேலும் சுமித்ரா தீவில்(ஸ்ரீவிஜயம்) உள்ள "லோபுதுவா"(Lubutuwa) என்ற இடத்தில் கி.பி.1088ல் இவர்கள் கோயில் கட்டியுள்ளனர். இன்றைய பர்மாவில் உள்ள "பாகன்(Pagan) என்ற இடத்திலும் 13ஆம் நூற்றாண்டில் விஷ்ணு கோயிலையும் இவர்கள் கட்டி

தம் பக்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.[25] வணிகக் குழுக்கள் வணிக நலன் மட்டும் பேணாமல் பொது நலனையும் கண்ணாக கருதிச் செயல்பட்டமை இவற்றால் தெற்றெனப் புலனாகும்.

## ஐரோப்பிய வணிகக் குழுமங்கள்:-

இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில்வணிக குழுமங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இவை கி.பி 9ஆம் நூற்றாண்டில் தோன்றின. இவை வணிகர் குழுமங்கள்(Merchant Guilds) என்றும், கைவினைஞர் குழுமங்கள்(Crafts Guilds) என்றும் அழைக்கப்பட்டன. கலை வல்லுனர் சங்கத்தினர், கைவினைஞர் சங்கத்தினர் மற்றும் வியாபாரிகள் சங்கத்தினர் என்றும் பல்வகை குழுமங்கள் அங்கு செயல்பட்டன. இச்சங்கங்கள் பல்வேறு பெயர் கொண்டு அழைக்கப்பட்ட போதிலும் அவை வணிகர் நலலுக்காக மட்டுமே இயங்கின. வணிகத்தின் நலனுக்காகவும, கைத்தொழில் மேன்மைக்காவும் அவை அரும்பாடுபட்டன. அரசாங்கத்தாலும், பொதுமக்களாலும் இவை நன்கு மதிக்கப் பெற்றன. சான்றாக இங்கிலாந்தில் செயல்பட்ட மர்ச்சண்ட்ஸ் ஆப் தி ஸ்டெபில்(Merchant of the Staples)மற்றும் டியூடோனிக் ஹேன்ஸ்(Teutonic Hanse) போன்ற சிறப்பான வணிகக் குழுக்களை கூறலாம்.[26] அவை நாட்டின் பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்தின. போட்டியற்ற வணிகத்துக்கும் இவை ஏற்பாடுகள் செய்தன. தங்கள் பகுதியில் பிற வியாபாரிகள் வணிகம் செய்ய இவை ஒருபோதும் அனுமதிக்கவில்லை. ஒரு வியாபாரி மற்றோரு வியாபாரியை விட விலைக் குறைவாக விற்றால் அவர்கள் தண்டிக்கப்பட்டனர். இக்குழுமங்கள் ஐரோப்பா முழுவதும் பல நகரங்களில் பரவிக் காணப்பட்டன

இக்கழகங்களில் தலைமைக் கைவினைஞர்(Master Craftsman), தொழிலாளி(Journey man), தொழில் பயிற்றுனர்(Apprentices) ஆகியோர் காணப்பட்டனர். இச்சங்கங்கள் தரமான பொருளை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் முன்னுரிமை அளித்தன. தமிழக வணிகக் குழுமங்கள் போன்றே வணிகம் தவிர்த்து பொது நலன் பேணுவதில் இவை அக்கறை காட்டின. ஒவ்வொரு கழகத்திலும் ஒரு துறவி பணியாற்றி சமயப்பணிகளை வழிநடத்தினார். இவை பல சமயவிழக்களை நடத்தியுதுடன், மன மகிழ்ச்சிக்காக நாடகங்களையும் ஏற்பாடு செய்தன. உறுப்பினர்கள் துயருற்ற போது தயங்காது துயர் துடைத்தன. விதவைகள், அனாதைகள் போன்றோருக்கு உடன் உதவியும் செய்தன. இதுதவிர பணிபுரியவியலாதோர், சிறை சென்றோர், கடன்பட்டுத் துன்புற்றோர் துயர்துடைத்தன. இடைகால ஐரோப்பா ஏழையாக இருந்ததால் ஏற்றுமதி இறக்குமதி அதிக அளவில் நடைபெறவில்லை. இக்குறையைப் போக்க வணிகக்குழுக்கள் அங்கு பாடுபட்டன. உள்நாட்டு வணிகத்தை ஊக்குவிக்க மார்ச்சண்ட்ஸ் ஆப் தி ஸ்டெபிள் என்ற குழுவும், ஆசிய நாடுகளுடன் வணிகம் செய்ய டியூடோனிக் ஹேன்ஸ் என்ற கழகமும் தோன்றின. இது தவிர Company of Merchant Adventure of London, Barbary Company, Levant Company, Company of one Hundred Associates, Royal African Company, Hudsons Bay Company, Muscovy போன்றவை அங்கு மிகச்சிறப்பாக இயங்கி வந்த வணிகக் குழுமங்களாகும். காலப்போக்கில் இவை ஜரோப்பாவில் முதலாளித்துவம் தோன்ற வழிவகை செய்தன.

ஐரோப்பாவில் தோன்றிய வணிகக்குழுக்கள் தோடர்ந்து 16ஆம் நூற்றாண்டு வரை வணிக நோக்குடன் மட்டும் செயல்பட்டன. ஆனால் 17ம் நூற்றாண்டில் இக்குழுக்கள் வேறு வடிவமெடுத்தன. விதியின் விளையாட்டால் இவை நாடுபிடிக்கும் பேராசையில் அலைந்தன. இங்கிலாந்து, பிரான்ஸ், நேதர்லாந்து, டென்மார்க், போர்த்துகீஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளின் வணிகக் குழுமங்கள் இவ்வாறான ஆசையில் உந்தப்பட்டு செயல்பட்டன. ஆங்கில கிழக்கிந்திய வணிகக்குழு கி.பி.1600லும், பிரான்ஸ் கிழக்கிந்திய வணிகக்குழு கி.பி.1664லும், டச்சு கிழக்கிந்திய வணிகக்குழு கி.பி.1602லும், டேனியர் கிழக்கிந்திய வணிகக்குழு கி.பி.1616லும், போர்த்துக்கீசிய கிழக்கிந்திய வணிகக்குழு கி.பி.1628லும் தோற்றுவிக்கப்பட்டு அரசியல் உணர்வுடன் செயல்பட்டன. இவை ஆசிய நாடுகளுடன் வணிகம் புரிந்து கொள்ளை லாபம் ஈட்டின. தான் வணிகம் புரிந்த நாடுகளின் அரசியல் அவல நிலையை நன்கு பயன்படுத்திக் கொண்டு அரசியல் சதுரங்க விளையாட்டு விளையாடி அதில் வெற்றியும் கண்டன. தமிழக வணிகக் குழுக்கள் வணிக நோக்கம் மட்டுமே கொண்டு செயல்பட்ட பொழுது, ஐரோப்பிய வணிகக் குழுக்கள் குறுக்கு வழியில் அரசியல் லாபம் தேடி அரசு அதிகாரத்தை அடைந்தன.

## முடிவுரை:-

வணிகக் குழுமங்கள் உலகம் முழுதும் காணப்படும் ஓர் அமைப்பாகும். இவை வணிகநலன் காக்கவேண்டும் என்ற நோக்குடன் தோற்றுவிக்கப்பட்டன. தமிழகத்தில் ஒன்பதாம் நூற்றாண்டில் இவை தோன்றி வளர்ந்தன. கி.பி.9 முதல் 13ம் நூற்றறாண்டுவரை இதன் ஆதிக்கம் உச்சநிலை அடைந்தது. இதேப் போன்ற சங்கங்கள் ஐரோப்பாவில் 11ஆம் நூற்றாண்டில் தோன்றின. அங்கு இவை வணிகர் நலன் பேணவும், தொழிலாலர் நலன் காக்கவும் தோன்றின. தமிழ் மற்றும் ஐரோப்பிய வணிகக்குழுக்கள் பற்றிய தொடர்புகள் ஆய்வுக்குரியதாகும். தமிழ் வணிகக்குழுக்கள் ஐரோப்பாவில் உள்ள கிரேக்க, ரோமானிய நாடுகளுடன் சிறப்புடன் வணிகம் புரிந்ததால் இக்குழுக்கள் பற்றி சிறப்புகளையும், பயன்களையும் ஐரோப்பிய வணிகர்கள் நன்கு அறிந்திருக்கக்கூடும். இவற்றால் ஐரோப்பாவில் வணிகக்ககுழுக்கள் தோன்றியிருக்க வாய்ப்புகள் உள. தமிழக வணிகக் குழுமங்களின் புகழ் உலகம் முழுவதும் பரவியிருந்தது இக்கருத்தை உறுதி செய்யும். மேலும் தமிழகத்தின் வணிகக்குழுக்களை ஒத்தே ஐரோப்பாவிலும் வணிகக் குழுமங்கள் செயல்பட்டதை எண்ணிப் பார்க்கலாம். தக்க ஆதாரங்கள் கிடைக்காததால் இத்தொடர்பை உறுதிப்படுத்த இயலவில்லை. ஆனால் தமிழகத்துக்கும் ஐரோப்பாவுக்கும் எப்பொழுதும் நெருங்கிய வணிகத் தொடர்பு உள்ளதை மறுக்கவியலாது. தமிழகத்தைப் போன்றே இக்குழுக்கள் தாமும் வளப்பட்டு, நாட்டின் பொருளியல் நிலையையும் வளப்படுத்தின.

இடைக்காலத்தில் வணிகர் நலன் பேண வணிகக் குழுமங்கள் தமிழகத்திலும், ஐரோப்பாவிலும் ஏற்படுத்தப்பட்டன. இவை வணிகர் நலன் காப்பதையும், வணிகர்களைப் பேணுவதையும் முதன்மைப் பணியாகக் கொண்டு செயல்பட்டன. வணிக குழுக்கள் வணிகர்களின் ஒற்றுமையை உலகுக்கு பறைசாற்றின. வணிக குழுமங்களால் வணிகம்

செழித்தது, வணிகர்கள் கொழித்தனர், நாட்டின் பொருளாதாரமும் சிறப்புற்றது. வணிக குழுமங்கள் பொருளியல் நோக்குடன் செயல்பட்டதோடு மட்டுமல்லாமல் சமூக அக்கறையுடனும் பாடுபட்டன. அவை இடையறாது சமூக, சமயத் தொண்டுகள் புரிந்தன. அக்காலத் தமிழ் அரசர்கள் இக்குழுக்களுக்கு பல விதமான சலுகைகள் வழங்கியதிலிருந்து அதன் முக்கியத்துவம் நன்கு புலனாகின்றது. வணிகக் குழுமங்கள் மூலம் தமிழர்களின் மேம்பாடடைந்த பொருளியலறிவைத் தெற்றென உணரலாம். இடைக்கால ஐரோப்பாவில் வணிக குழுமங்கள் பெற்றிருந்த சிறப்பைத் தமிழக வணிகக் குழுமங்களும் பெற்றிருந்ததை மறைக்கவோ மறுக்கவோ இயலாது.

.

## References

[1] Annual Report on Indian Epigraphy No:215/1905.

[2] South Indian Inscriptions Vol:4 No-14.

[3] Annual Report on Indian Epigraphy No:474/1926.

[4] Annual Report on Indian Epigraphy No:439/1917.

[5] South Indian Inscriptions Vol:8 No-138

[6] Epigrapica Indica Vol:18,PP:299-310.

[7] Annual Report on Indian Epigraphy No:617/1926.

[8] Annual Report on Indian Epigraphy No:505/1921.

[9] Annual Report on Indian Epigraphy No:406/1914.

[10] Annual Report on Indian Epigraphy No:71/1897.

[11] Annual Report on Indian Epigraphy No:131/1926.

[12] Annual Report on Indian Epigraphy No:505/1922.

[13] Annual Report on Indian Epigraphy No:171/1894.

[14] Annual Report on Indian Epigraphy No:131/1926.

[15] Annual Report on Indian Epigraphy No:82/1907.

[16] Annual Report on Indian Epigraphy No:256/1912.

[17] Annual Report on Indian Epigraphy No:342/1912.

[18] Annual Report on Indian Epigraphy No:321/1912.

[19] Sastri.K.A.N, The Colas, Chennai,1975,P:596

[20] Avanam Magazine No:8, P:72.

[21] David Washbrok, Intimations of modernity in South India, South Asian History and Culture, 1 (2009) 125-148.22.

[22] Annual Report on Indian Epigraphy No:519/1905.

[23] South Indian Inscriptions Vol:4,No-147

[24] Annual Report on Indian Epigraphy No:439/1917.

[25] Saster.K.A.N. The Cholas, Opp.Cit. P:597.

[26] Arjun Appadurai, Arjun Appadurai (Interviews), Journal Globalizations, 11 (2014) 481-490.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License